# ப [ணி] னி ஓய்வு [னி தான் ணி அல்ல]

*by **Mr. Rajeswaran A,** Senior Manager, CO/RMD, Indian Bank*

ஆண்டு முப்பத்தைந்து ஆண்டு முடித்தவன்
அறையை விட்டு வெளியேறுகிறேன்.

வெளியிலிருந்து எட்டிப் பார்த்தால்
கண் கசக்கும் கணினி.
கவிழ்ந்து அழும் காகிதங்கள்
மன சஞ்சலத்துடன் மருகும் கோப்புகள்
மை தீரும் நிலையில் பேனா
என் இடுப்பைணைத்த இருக்கை
காகிதங்களோடு என் கைகளையும்
காதலித்த கண்ணாடி மேஜை
எப்போதும் ஓடும் ஏசி
எப்போதாவது உபயோகப்படும் மின் விசிறி
பிரியா விடை தந்தன...
மனம் கனத்தது....
பயணித்து வந்த வழி நீள வழி
பயணம் நெடும் பயணம்
பணம் தந்த பயணம்
பதவி தந்த பயணம்
ஒண்டுக் குடித்தனத்தில் பிறந்தவனை
ஒற்றை மாளிகைக்கு
குடிபெயர்த்து இட்டுச் சென்ற பயணம்...
முடிவுறுதல் சுமைதான்...
மனம் கனத்து விடு விடுவென நடக்கிறேன்
பணி நினைவுகள் விடேன் என்று
தொடர்கின்றன.

மாற்றம்... ஏற்றுதான் ஆக வேண்டும்...
சிறிது மனம் மாற  மனிதர்களை தேடுகின்றேன்
வழியனுப்ப வந்தவர்கள் நிற்கிறார்கள்
மனைவி நிற்கிறாள் பக்கத்தில்...
மாலையை சுமந்த படி சற்றேறக் குறைய
மணக்கோலத்தில் வண்டியில் ஏறுகிறோம்...
வந்தவர்களில் சிலர் வீடு வரை வருகிறார்கள்...
இனிப்பு காரம் இதர பேச்சுக்கள் முடிந்து
கை காட்டி விடை பெறுகிறார்கள்....
சிறிதே உரைக்கிறது தனிமை....
கனக்கிறது மனதில்...

மறு நாள் விடியல் வாசலில் அமர்கிறேன்...
மெல்லமாய் சுற்றி வெளியில் பார்க்கிறேன்...
இடுப்பை அணைக்கிறது புது இருக்கை...
குனிந்து பார்க்கிறேன் ... சாய்வு நாற்காலி...
ஆம் நான் ஓய்வு பெற்று விட்டேன்...
இனி உனக்கு ஓய்வில்லை இருக்கையே...!

இதமான ஒரு தென்றல்
என் வெற்று மார்பு தடவ....
வெது வெதுவான காபி
தொண்டை உள்ளே இறங்க...
இது வரை உணராத இதம் "சுகம்"..!

கண்ணை மூடுகிறேன்
கவனத்தை காதுகளுக்குக் கொடுக்கிறேன்..
சிறு பறவைகள் சத்தம்...
பக்கத்து தெரு பாட்டி பேரனை கூப்பிடும் சத்தம்
பசுவின் அம்மா ஓசை
பக்கத்துக் கோவிலின் மணியோசை
எல்லாம் இங்குதானே இருந்திருக்கின்றன...
எனக்கு ஏன் புதியதாய் தோன்றுகிறது...



மீண்டும் எண்ணம் பணிக் காலம் செல்கிறது...
குருவி கூடு போல் வாழ்க்கை...
காகிதங்களோடும் கோப்புகளோடும்...
எண்ணி விடக்கூடிய சின்ன நட்பு வட்டம்
எத்தனை விடுபட்டிருக்கின்றன வாழ்வில்...
பணிக்காலம் ... ஊதல் பொங்கும் பனிக்காலம்.
சூரியன் பாராமல் முடங்கிக் கிடந்த ஒரு
காலம்...!!!
ஓய்வு.... ஓய்வு... என்று ஒலித்த மனம்
கூவலை நிறுத்தியிருந்தது....
இன்னும் இருபது வருடம்தானே வாழ்வு
என்ற நினைவு மாறி...
அறுபத்து மூன்று கோடி வினாடிகள் என்று
அலகு மாறுகிறது...
மாற்றம்.. இம்முறையும் ஏற்கிறேன்..
உற்சாகத்தோடு... உள்ளே திரும்பி

மனைவியிடம் கேட்கிறேன்...
கிராமத்துக்கு போயிட்டு வரலாமா"?
"போகலாமே..." சிரித்தபடி அருகில் வருகிறாள்.

கால் நூற்றாண்டுக்கு பின்
கூர்ந்து பார்க்கிறேன்.. அவள் அழகு
அப்படியேத்தான் இருக்கிறது...
அவள் கன்னம் நிமிண்டி
உள்ளே செல்கிறேன் குளிக்க..
ஓரக்கண்ணால் பார்த்தபடி...

இன்னும் ஒரு புதையல் கண்ணில் படுகிறது
இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து...
காட்டிக் கொடுக்கிறது நாணத்தை
அவள் கன்னம் சிவந்து....!!!